**கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து,சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. உலகின் முதன் மொழி

அ) இலத்தின் ஆ) தமிழ் இ) சீனம் ஈ) ஆங்கிலம்

2. காட்டு மல்லிகை பூத்தகாலம்

அ) கார்காலம் ஆ) கோடைகாலம் இ) நல்லகாலம் ஈ) அறுவடைக்காலம்

3. ஆ மேய்க்கும் இடையர்குலம் பெண்ணை இப்படி அழைப்பர்.

அ) குறத்தி ஆ)உழத்தி இ) மேய்ச்சி ஈ) ஆய்ச்சி

4. இயற்றமிழ் என்பது

அ) பாடல் உரைநடையும் ஆ) இசையும் பாட்டும்

இ) இசையும் நாடகமும் ஈ) பாட்டும் நாடகமும்

5. சாரியைகளுக்கு சரியான எடுத்துக்காட்டு

அ) உறு தவ ஆ) தான் தோறும் இ) ஆல் ஒடு ஈ) அத்து அற்று

6. ஐந்தாம் வேற்றுமைக்குச் சரியான உருபுகள்

அ) கண் இடம் ஆ) இல் இன் இ) ஆல் ஒடு ஈ) அது உடைய

7. மைவிழி சிவப்புச் சட்டை அணிந்தாள். இங்கே சிவப்பு என்பது

அ) பூ ஆ) எழுவாய் இ)அடைமொழி ஈ) அழகு

8. சரியான இறந்தகால இடைநிலைகள்.

அ) த்,ட்,ற்,இன்,ன் ஆ) ப்,வ்,உம் இ) கின்று, கிறு ஈ) க்,ச்,ட், ப்

9. ஆய்ச்சியரின் கைக்கு வந்தபின் கார் என்ற பெயர்

அ) நீர் ஆ) வார் இ) பேர் ஈ) மோர்

10. மாமா கனடாவில் இருக்கிறார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) ஐந்தாம் வேற்றுமை ஆ) ஏழாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) வேற்றுமை இல்லை

11. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை எழுதியவர்

அ) திருத்தக்கதேவர் ஆ) இளங்கோவடிகள்

இ) சீர்த்தலைச்சாத்தனார் ஈ) நாதகுத்தனார்

12. ஔவையாருக்கு நெல்லிக்கனி அளித்த மன்னன்.

அ) எல்லாளன் ஆ) சங்கிலியன்

இ) அதியர்மான் ஈ) தொல்காப்பியர்

13. ஊரார் கொடுக்கும் செல்லத்தில் செருக்கொடு மலரும் பூஞ்செடி….

அ) அல்லிகை ஆ) செவ்வந்தி

இ) முல்லை ஈ) நீலம்

14. பிறரை இழித்து வசைபாடுவதில் வல்லவர்

அ) சோமசுந்தரப்புலவர் ஆ) காளமேகம்

இ) பாரதியார் ஈ) உருத்திரமூர்த்தி

15. நெல் + கதிர் இவற்றைப் புணர்த்தினால்

அ) நெற்கதிர் ஆ) நெல்க்கதிர்

இ) நெல்கதிர் ஈ) நெற்க்கதிர்

16. துள்ளினமாடு பொதிசுமக்கும் என்னும் பழமொழி குறிக்கும் பொருள்

அ) துள்ளித்திரிகிற மட்டைத்தான் அடக்கிவைப்பர்

ஆ) மாட்டின் தொழில் பொதி சுமத்தல்

இ) அடக்கமாக இருந்தால் மாட்டுக்கு அழகு

ஈ) அடங்காமல் இருந்தால் இடர்ப்பட வேண்டிவரும்.

17. தோன்றல் திரிதல் கெடுதல் புணர்ச்சிகளை இப்படிக் கூறுவர்.

அ) மாறுபாடுபுணர்ச்சி ஆ) மாறாப்புணர்ச்சி

இ) இயல்புப்புணர்ச்சி ஈ) மாறியபுணர்ச்சி

18. திணை,பால்,எண்,இடம்,காலம் இவற்றை வெளிப்படையாகக் காட்டும் வினைச்சொல்

அ)குறிப்புவினை ஆ) தெரிநிலைவினை

இ) எச்சவினை ஈ) குறைவினை

19. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் ............. கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) அன்பு ஆ பாசம் இ) நட்பு ஈ) கேண்மை

20. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ)நற்றிணை ஈ) மணிமேகலை

21. கதிரவன் காலிக்கும் திக்கு

அ) வடக்கு ஆ) கிழக்கு இ) தெற்கு ஈ) மேற்கு

22. யானை பிளிறும் என்பது போல குதிரை

அ) கத்தும் ஆ) கனைக்கும் இ) கதறும் ஈ) உறுமும்

23. அணிலுக்குப் பிள்ளை போல் தவளைக்கு

அ) பிள்ளை ஆ) பேத்தை இ) குட்டி ஈ) குருளை

24. மூத்தோரை மதிக்காது அடக்கமின்றிப் பேசுவதைக் குறிக்கும் மரபுத்தொடர்

அ) துள்ளிக் குதித்தல் ஆ) ஆட்டம் போடுதல்

இ) வாய்காட்டுதல் ஈ) புறங்கூறுதல்

25. கேண்மை என்ற சொல் குறித்து நிற்கும் பொருள்

அ) நட்பு ஆ) துன்பம் இ)வீரம் ஈ) தானம்

26. மெய்வல்லுநர் போட்டியில் தொய்யன் முதலாம் இடத்தைப் பெற்றது. இது எவ்வகையான ஆகுபெயர்.

அ) பொருளாகுபெயர் ஆ) இடவாகுபெயர்

இ) தொழிலாகுபெயர் ஈ) சினையாகுபெயர்

27. நாம் தைப்பொங்கல் கொண்டாட்டத்தில் நன்றி செலுத்துவது

அ) கதிரவனுக்கு ஆ) மாட்டுக்கு இ) கழனிக்கு ஈ) உழவருக்கு

28. நூலின் தொடக்கத்தில் அந்நூலை அறிமுகப்படுத்தி எழுதும் உரை.

அ) அணிந்துரை ஆ) முன்னுரை இ) ஆரம்பவுரை ஈ) சிறப்புரை

29. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ)பவளவிழா ஆ) வைரவிழா இ) பொன்விழா ஈ) வெள்ளிவிழா

30. நேருக்கு நேர்நின்று போரிடும் போது ஏற்படும் புண்

அ)போர்ப்புண் ஆ)விழுப்புண் இ)வெற்றிப்புண் ஈ) வீரப்புண்

(30 புள்ளிகள்)

## 2) கீழ்வரும் உரையை வாசித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடைதருக.

பண்டைத்தமிழ் மன்னர்கள் பகைநாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்பு கூட மாந்தநேயத்தைப் போற்றிப் பேணி வந்துள்ளனர். போர் தொடங்குவதற்கு முதல் பகை நாட்டிலுள்ள பல்வேறு மக்களுக்கும் போர் தொடங்கும் செய்திகளை பறை அறைந்து அறிவிப்பர். ஆநிரைகளும், ஆசிரியர், அந்தணர் போன்ற சான்றோர்களும் தங்கள் குடிவழிக்கு இன்னும் மக்களைப் பெறா இணையரும் போரோடு தொடர்புடையாரும் படைவீரர்களுமே எம்மால் தாக்கப்படுவர். கடும் போர் தொடங்கவுள்ளோம்! என்று பகை நாட்டு மக்கள் துன்புறாமல் போர் செய்தனர். ஆனால், இன்றோ எங்கோ இருந்து கொண்டு ஆழியை அழுத்தி எதிரியின் போர்க்களத்தில் ஒரு புல் பூண்டு கூட மிஞ்சாமல் அழித்துவிடக் கூடிய ஆயுதங்கள் பெருகிவிட்டன. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கும் ஆயுதங்கள். மனிதன் சுவாசிக்கும் போது மூச்சோடு உள்நுழைந்து ஆளை எரிக்கும் நஞ்சுவளிக்குண்டுகள், கொத்தணிக் குண்டுகள், போன்ற எத்தனையோ கொலைக் கருவிகள் மக்களை ஊனமுறச்செய்வதோடு கொன்று குவிக்கின்றன. அதிலும் சிங்கள அரசானது காப்பரண் என்று சில பகுதியை ஒதுக்கி, போர் முனையைவிட்டு அந்த வலயத்துக்குள் வாருங்கள்! உங்களைக் பேணிக்காப்போம் என்று குவியச் செய்து விட்டுக் கொத்தணிக் குண்டுகளையும் எரிகுண்டுகளையும் வீசி ஆயிரமாயிரம் எம் தமிழுறவுளை வகை தொயையாகக் கொன்று குவித்தது.எம் தேசத்தில் எங்கு பார்த்தாலும் மனித எச்சங்கள். சிங்களத்தின் கொடூரச் செயலையறிந்தும் மாந்த நேயம் பேசும் இவ்வுலகின் மாந்த நேயமும் மனச்சாட்சியும் எங்கு ஓடிமறைந்தன.

1. தமிழ் மன்னரால் கடைப்பிடிக்கப்படும் மாந்தநேயப் போர்முறைகள் எவை?

______________________________________________

______________________________________________

2. மாந்தநேயத்தைப் போற்றிப் பேணிவந்தவர் யார்?

---

---

3. இன்று உலகில் எவ்வாறான போர் முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன?

---

---

4. மாந்தநேயம் என்றால் என்ன?

---

---

5. சிங்களம் எத்தகைய போர்முறையைக் கடைப்பித்தது?

---

---

(10 புள்ளிகள்)

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் நீங்கள் விரும்பும் ஐந்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

1. சங்ககால நூல்கள் எவற்றைப் பற்றி எடுத்துக் கூறுகின்றன?

______________________________

______________________________

______________________________

2. காட்டு மல்லிகை என்ற பாடலைப் பாடிய கவிஞர் காட்டுமல்லிகையுடன் தன்னையும் ஏன் ஒப்பிட்டுப் பாடினார்?

______________________________

______________________________

______________________________

3. மன்னன் நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஏன் ஔவையாருக்குக் கொடுத்தான்?

______________________________

______________________________

______________________________

4. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
   இடுக்கண் களைவதாம் நட்பு - பொருள் தருக

______________________________

______________________________

______________________________

5. கதிரவன் எவ்வகையில் எமக்கு உதவுகின்றான்?

______________________________

______________________________

______________________________

6. கனகசுப்புரத்தினம் தென்திசையைப் பார்த்து ஏன் பூரிக்கின்றார்?

7. நீங்கள் கற்ற திருக்குறளுக்கமைவாக.
உண்மை பேசுவதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டுதருக?

(10 புள்ளிகள்)

**4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடைதருக**

புதுமைப்பெண்

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்- நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி

1. பாரதி கண்ட புதுமைப்பெண் இந்தப் பாரில் என்ன நடத்தப் போகிறாள்?

2. ஈசன் பெண்ணுக்குள் எதை வைத்துள்ளான்?

3. தலைகவிழ்ந்து நிற்பவர் யாவர் ?

4. யாரை விந்தை மனிதர் என்றார் புலவர்?

5. எதில் பெண் இளைத்தவளில்லை?

(10 புள்ளிகள்)

**5) இலக்கண வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1) பெயரெச்சம்,வினைஎச்சம் இரண்டையும் எடுத்துக்காட்டுடன் தருக.

2) விகாரப்புணர்ச்சி மூன்றையும் எடுத்துக்காட்டுடன் தருக.

3. அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வாக்கிய வகைகளைத் தருக.

4. ஆகுபெயர்கள் எத்தனை? காலவாகுபெயரை எடுத்துக்காட்டுடன் தருக.

6. உடுக்கை ------------------------------------------------------------------------------------------------

மாட்சி ------------------------------------------------------------------------------------------------

கேளிர் ------------------------------------------------------------------------------------------------

மகவு ----------------------------------------------------------------------------------------------------

அடவி ----------------------------------------------------------------------------------------------------

ககனம் ----------------------------------------------------------------------------------------------------

**(15 புள்ளிகள்)**

**6) தரப்பட்டுள்ள வாழ்விடமொழியின் விடயத்தை தமிழில் மொழிபெயர்க்கவும். நீங்கள் இலகுவில் எழுதுவதற்காகத் தரப்பட்டுள்ள மொழிபெயர்ப்புச்சொற்கள் வேறுபல கருத்துக்களையும் தரும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.**

Språk

Enten vi snakker eller skriver , kommunisere vi med hverandre ved å bruke språk, et system der lyder eller tegn formidler gjenstander, handler og tenger. Språk er en av de tingene som gjorde framveksten av sivilisasjon mulig Siden mennesker kunne snakke, var de i stand til å videreføre kunnskap. Språkene har utviklet seg gjennom tusenvis av år og tilpasser seg hele tiden etter hvordan brukernes behov endre seg . Nye ord ,slik som internett kommer hele tiden inn i ordforrådet, og grammatikken , reglene som styrer bruken av språk endre seg også.

**Kommunisere :** தொடர்பு, **Formidler**:கருத்தை வெளிப்படுத்துதல் ,பொருள்
**Genstander:** மனதில் உள்ளவிடயம், உள்ளக்கிடக்கை திறமையாக,

**Ordforrådet** : சொற்றொகுதி,சொல்வளர்ச்சி ,

**Styrer:** நெறிப்படுத்துதல்,வழிப்படுத்தல்

**Framveksten**: புதிதாகமாறுதலடைதல்

---

---

---

(5 புள்ளிகள்)

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையால் கட்டுரை எழுதுக.**

1. தைப்பொங்கல் பாடநூலில் அமைந்தவாறு எழுதுதல்
2. இனிய பூம்பனிக்காலம்
3. தமிழின் வளம்

தேன் தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ்,முத்தமிழ், தமிழில் உருவம் பருவம் தமிழர் உலகமக்கள் அனைவருக்கும் உறவினர், முதற்சற்கம் இடைச்சங்கம் கடற்கோள் அழிவு, தொல்காப்பியம், பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள்,

இந் நூல்களால் வீரம்கொடை அறிதல்

திருக்குறள்,, ஐம்பெரும்காப்பியங்கள்,95வகைச்சிற்றிலக்கியம்

4. கடற்கோள் அழிவு

பூமிஅதிர்வு, கடற்கோள் வீறிட்டெழுதல், கடல்நீர் நாட்டினுள் புகுந்து அழிவை ஏற்படுத்துதல், கழனிகள் நீரினுள் மூழ்கி நாசமாதல், குடிநீர் ,உணவு, கட்டடங்கள் இடிந்து விழுதல்,நோய்த்தொற்றுப் பீடித்தல் வைத்தியசாலைகள், வாழ்வதற்கு ஏற்ற இடமின்றித்தவித்தல், சொல்லொணாத்துயர்

( 20 புள்ளிகள்)